# தென்காசி நகராட்சி

## 31.03.2010 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள்: 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டண கழிப்பிடத்தில் (தலைமை தபால் நிலையம் அருகில்) மராமத்து பணி மேற்கொள்ள வேண்டியிருப்பதால் உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (629/10/இ1)

**மன்றப்பொருள்:2**

இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட புதிய பேரூந்து நிலையம், தினசரி சந்தை ஆகியவைகளில் கீழே கண்டுள்ள கடைகளுக்கு அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் (ந.நி.4) துறை நாள்.03.07.07ன்படி தற்பொழுது கடை நடத்தி வரும் குத்தகைதாரர்களின் குத்தகை காலம் மூன்றாண்டு முடிந்ததின் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும் இவ்வாறாக 9 ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை தொகை 15 சதவீதம் உயர்த்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்கண்ட கடைகளுக்கு கீழ்க்கண்ட விபரப்படி வாடகை தொகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் 3 ஆண்டுகளுக்கு உரிமம் நீடித்து வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | கடை எண் | குத்தகை தாரர் பெயர் | தற்போதைய வாடகை | அளவு (ச.அடி) | ச.அடி மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பு.பேருந்து 21 | எஸ்.பி.சுப்பையா | 2898 | 80 | 36.22 |
| 2 | 6 | கே.என்.எல்.சுப்பையா | 3531 | 80 | 44 |
| 3 | அசைவ உ.விடுதி | ஜி. கந்தையா | 17480 | 80 | 54.62 |
| 4 | 40 | எம். பிச்சையா | 1869 | 80 | 22.36 |
| 5 | காலியிடம் | முகம்மது சுல்தான் | 115 | 80 | 3.83 |
| 6 | சந்தை 4 | எஸ்.ஆர். சந்திரன் | 518 | 80 | 6.47 |
| 7 | 15 | எஸ்.சுடலியம்மாள் | 400 | 80 | 5 |
| 8 | 23 | டி.சுப்பம்மாள்(எ) தாயம்மாள் | 440 | 80 | 5.50 |
| 9 | 24 | டி.சுப்பம்மாள்(எ) தாயம்மாள் | 400 | 80 | 5 |
| 10 | 27 | எஸ். கந்தசாமி | 505 | 80 | 6.30 |
| 11 | 28 | எஸ். கந்தசாமி | 485 | 80 | 6.06 |
| 12 | 29 | உ.திருப்பால்பாண்டியன் | 425 | 80 | 5.31 |
| 13 | 30 | உ.திருப்பால்பாண்டியன் | 420 | 80 | 5.25 |

| எதிர் கடை வாடகை | | ச.அடி.மதிப்பு ரூ. | குத்தகை முடிவடையும் நாள் | 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை (ரூ) |
|---|---|---|---|---|
| ரூ. | அளவு (ச.அடி) | | | |
| 7 | 8 | 9 | 10 | 11 |
| 3120 | 80 | 3120 | 31.03.09 | 3333 |
| 2381 | 80 | 2381 | 31.03.09 | 4061 |
| 14548 | 320 | 45.46 | 31.03.09 | 20102 |
| 1380 | 80 | 17.25 | 31.03.07 | 2149 |
| 1380 | 80 | 17.25 | 31.07.09 | 132 |
| 587 | 80 | 7.33 | 31.03.09 | 596 |
| 380 | 80 | 4.75 | 28.02.10 | 460 |
| 415 | 80 | 5.18 | 30.04.10 | 506 |
| 850 | 80 | 10.62 | 30.04.10 | 460 |
| 1210 | 80 | 15.12 | 31.03.10 | 586 |
| 558 | 80 | 6.97 | 31.03.10 | 558 |
| 483 | 80 | 6.03 | 31.03.10 | 489 |
| 489 | 80 | 6.10 | 31.03.10 | 483 |

அ.கு 1 அரசாணை எண்(நிலை) 92ல் தெரிவித்துள்ளபடி மேற்படி கடைகளுக்கு 15 சதவீதம் விழுக்க்ாடு வாடகை உயர்வு செய்து மேலும் மூன்று ஆண்டு காலத்திற்கு உரிமம் நீட்டித்துக் கொடுக்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>மன்றப்பொருள்: 3</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் குத்தகை இனத்தை 2009-12 ஆகிய மூன்றாண்டுகளுக்கு முதல் ஆண்டாகிய 2009-10ம் ஆண்டுக்கு திரு.நெ.கோமதி ராமலிங்கம் என்பவர் குத்தகை அனுபவிக்கும் உரிமம் எடுத்திருந்தார். மேற்படியார் தனக்கு 2010-11ம் ஆண்டிற்கு மேற்படி குத்தகை இனம் வேண்டாம் என்று மனுச் செய்துள்ளார். எனவே புதிய பேரூந்து நிலையத்திலுள்ள தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் குத்தகை இனத்தை 2010-11ம் ஆண்டிற்கு மறு ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மறு ஏலம் விடுப்படுவதனால் ஏற்படும் நிதி இழப்பினை சம்பந்தப்பட்ட முன்னார் ஒப்பந்தக்காரர் திரு.நெ.கோமதிராமலிங்கம் அவர்கள் வசூல் செய்யவும் தீர்மானிக்கலாம். (890/10/அ2)

<u>மன்றப்பொருள்: 4</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN72 Z 2274 மினிலாரிக்கு 2 டயர் ரீபட்டன் போடுவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.4,000/-க்கு மன்ற அனுமதிக்கும் மேற்படி பணியை அவசரம் அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற டி.வி.எஸ். நிறுவனத்தின் மூலம் மேற்படி பணியை செய்ய மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அ.கு: மன்றம் அனுமதிக்கலாம். (977/10/எச்1)

<u>மன்றப்பொருள்: 5</u>

தென்காசி நகராட்சி எல்லையினுள் புதியதாக உருவாக்கப்படும் அனுமதியில்லாத மனைப்பிரிவுகளை கட்டுப்படுத்த நகராட்சி அலுவலகத்தில் இருந்து பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பர பலகைகள் மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட வேண்டும் என நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் முடிவு செய்யப்பட்டதால் தினசரி நாளிதழில் பிரசுரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத்திற்கும் விளம்பர பலகைகள் 10 எண்ணம் (பத்து எண்ணம்) அமைக்க ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு: விளம்பரம் செய்ய ஆகும் உத்தேச செலவினத்தினை பொதுநிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**மன்றப்பொருள்: 6**</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூரில் உள்ள புதிய உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மட்கிய உரத்தினை சலித்து பிரித்தெடுப்பதற்கு பெரிய கண் உள்ள சல்லடை ஒன்றும்ம் சிறிய கண் உள்ள சல்லடை ஒன்றும் ஏற்கனவே புதிய உரக்கிடங்கில் உள்ள கிணற்றின் பழுதுபட்டுள்ள குழாய்கள் , மின்மோட்டாரினை பழுதினை சரிசெய்யவும் உத்தேச செலவினம் ரூ.5,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.
மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 7**

2009-10ம் ஆண்டிற்கு சமுதாய கட்டமைப்பு பிரிவிற்கு மான்யம் ரூ.10,25,661 வரப்பட்டுள்ளது.

மேற்படி மான்யத்தொகையை 1) சித்த மருத்துவ முகாம் 2) குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி 3) விழிப்புணர்வு பேரணி நடத்த சமுதாய மேம்பாட்டுச் சங்கம் 1 மற்றும் 2 தீர்மானம் எண்.5 நாள்.30.12.2009 ல் தீர்மானம் நிறைவேற்றிஉள்ளது.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு குழு தனது தீர்மானம் எண்.5 நாள்.13.01.2010ல் சித்த மருத்துவ முகாம், பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பேரணி நடத்த தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

எனவே மேற்படி தீர்மானத்தை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு  மன்றம் வழஙகலாம்.

**மன்றப்பொருள்: 8**

2009-10ம் ஆண்டிற்கு சிக்கன நாணய சஙகத்திற்கு சுழல்நிதி வழஙக ரூ.51,283-/ மானியம் வரப்பட்டுள்ளது.

மேற்படி மான்யத்தொகையை சுழல்நிதியாக குழுக்களின் மூப்பு அடிப்படையில் வழஙக சமுதாய மேம்பாட்டுச் சஙகம் 1 மற்றும் 2 தீர்மானம் எண்.4 நாள்.30.12.2009 ல் தீர்மானம் நிறைவேற்றிஉள்ளது.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு குழு தனது தீர்மானம் எண்.5 நாள்.13.01.2010ல் குழுக்களுக்கு மூப்பு அடிப்படையில் சுழல்நிதி வழஙக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

எனவே மேற்படி சுழல்நிதியை குழுக்களின் மூப்பு அடிப்படையில் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு  மன்றம் வழஙகலாம்.

**மன்றப்பொருள்: 9**

2009-10ம் ஆண்டிற்கு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டத்திற்கு ரூ.1,53,849-/ மானியம் வரப்பட்டுள்ளது.

மேற்படி மான்யத்தொகைக்கு 3 குழுக்களுக்கு முதிர்வின் அடிப்படையில் தொழில் தொடஙக கடன் வழஙக மான்யம் வழஙக சமுதாய மேம்பாட்டுச் சஙகம் 1 மற்றும் 2 தீர்மானம் எண்.3 நாள்.30.12.2009 ல் தீர்மானம் நிறைவேற்றிஉள்ளது.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு குழு தனது தீர்மானம் எண்.3 நாள்.13.01.2010ல் குழுக்களுக்கு கடன் வழஙக தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

எனவே மேற்படி 3 குழுக்களுக்கு தொழில்புரிய கடன் வழஙக மான்யம் வழஙக மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு  மன்றம் வழஙகலாம்.

**<u>மன்றப்பொருள்: 10</u>**

2009-10ம் ஆண்டிற்கு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்ட சுய வேலைவாய்ப்புக்கு ரூ.2,05,132/- மானியம் வரப்பட்டுள்ளது.

மேற்படி மான்யத்தொகைக்கு 50 நபர்களுக்கு தனிநபர் கடன்பெற மான்யம் வழங்க சமுதாய மேம்பாட்டுச் சங்கம் 1 மற்றும் 2 தீர்மானம் எண்.2 நாள்.30.12.2009 ல் தீர்மானம் நிறைவேற்றிஉள்ளது.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு குழு தனது தீர்மானம் எண்.2 நாள்.13.01.2010ல் 50 நபர்களுக்கு கடன்பெற மானியம் வழங்க தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

எனவே தனிநபர் கடன் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு மன்றம் வழங்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 11</u>**

2009-10ம் ஆண்டிற்கு நகர்ப்புறசுய வேலைவாய்ப்பு திட்ட பயிற்சிக்கு ரூ.3,07,699/- மானியம் வரப்பட்டுள்ளது.

மேற்படி மான்யத்தொகைக்கு 31 பயனாளிகளுக்கு தொழிற்பயற்சி வழங்க சமுதாய மேம்பாட்டுச் சங்கம் 1 மற்றும் 2 தீர்மானம் எண்.6 நாள்.30.12.2009 ல் தீர்மானம் நிறைவேற்றிஉள்ளது.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு குழு தனது தீர்மானம் எண்.6 நாள்.13.01.2010ல் 37 பயனாளிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்க தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

எனவே மேற்படி பயனாளிகளுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு

அ.கு மன்றம் வழங்கலாம்.

<u>மன்றப்பொருள்: 12</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மினிலாரி வாகனம் TN76 B 1361 வாகனத்தில் உள்ள பழுதினை பழுதுநீக்கம் செய்ய இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி நாள்.05.03.2010ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 9.03.2010ம் தேதியன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற குறுகியகால விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மூஸா இன்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>194, செஙகோட்டை ரோடு , தென்காசி | 4,850 |
| 2 | எஸ். நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1ஏ, பஸ்டாண்ட் ரோடு, தென்காசி | 5,700 |
| 3 | செல்லப்பா மோட்டார் ஒர்க்ஸ்,தென்காசி | 5,250 |

அ.கு 1 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட மூஸா இன்ஜினியரிங ஒர்க்ஸின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 பொதுசுகாதாரப்பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.(842/10/எச்1)

**<u>மன்றப்பொருள்: 13</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு டிப்பர் ஆட்டோ TN76 B 1361 வாகனத்தில் உள்ள பழுதினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலவு செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழஙகலாம்.
பொதுசுகாதாரப்பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 14</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN72 X 4369 லாரிக்கு தகுதிச்சான்று காலம் 12.02.2010ல் முடிவடைகிறது. தகுதிச்சான்று புதுப்பித்தல் வேண்டி பழுது நீக்கப் பணிகள் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.35,500/- க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழஙகலாம்.(997/10/எச்1)

<u>மன்றப்பொருள்: 15</u>

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மினிலாரி வாகனம் TN72 Y 7078 வாகனத்தில் உள்ள பழுதினை பழுதுநீக்கம் செய்ய இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி நாள்.05.03.2010ம் தேதியில் வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 9.03.2010ம் தேதியன்று கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற குறுகியகால விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மூஸா இன்ஜினியரிங ஒர்க்ஸ்,<br>194, செஙகோட்டை ரோடு , தென்காசி | 4,450 |
| 2 | எஸ். நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1ஏ, பஸ்டாண்ட் ரோடு, தென்காசி | 4,850 |
| 3 | செல்லப்பா மோட்டார் ஒர்க்ஸ்,<br>தென்காசி | 5,250 |

அ.கு
1 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட மூஸா இன்ஜினியரிங ஒர்க்ஸின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
2 பொதுசுகாதாரப்பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழஙகியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.(841/10/எச்1)

## மன்றப்பொருள்: 16

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மினிலாரி வாகனம் TN72 Y 7078 ல் உள்ள பழுதினை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.4,500/- (ரூபாய் நான்காயிரத்து ஐநூறு மட்டும்) செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 பொதுசுகாதாரப்பிரிவு பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறுகிய கால விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்

## மன்றப்பொருள்: 17

இந்நகராட்சி கணினி பிரிவிலுள்ள Trancened UPS 3KVA பழுதினை சரிசெய்ய இந்நகர்மன்ற தீர்மானம் எண்.20 நாள்.13.01.2010ல் ஒப்புதல் வழஙகப்பட்டது. அதன்படி 23.02.2010ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | கோல்டன் இன்போடெக்,<br>14/42, உமரேபாரூக் தெரு, தென்காசி | 14,500 |
| 2 | பீம் இன்போடெக், 29/42 அம்மன் சன்னதி தெரு, தென்காசி | 16,000 |

அ.கு 1 மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். (3804/09/இ1)

## மன்றப்பொருள்: 18

இந்நகராட்சிக்கு 2009-10ம் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, தண்ணீர் கட்டணம், குத்தகை இனஙகள் குறைந்த செலவிலான கழிப்பிட கடன் நிலுவைகளை கணனி மூலம் விரைவில் செலுத்த பொதுமக்களுக்கு ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யும் பொருட்டு மைக்செட் ஆட்டோவாடகை டீசல் பேட்டரி உட்பட சேர்த்து விளம்பரம் செய்ய 05.02.2010ல் வரப்பெற்ற கீழ்க்கண்டுள்ள விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளிகள் நாள் ஒன்றுக்கு |
|---|---|---|
| 1 | திரு.பி. அழகையா, சுவாமி சன்னதி, தென்காசி | 2,150 |
| 2 | திரு.ஆர்.பாபு, சுசிலா டெக்ரேஷன் & சவுண்ட்ஸ், 20, கீழஆவணி மூலவீதி, தென்காசி | 2,175 |
| 3 | திரு.எம்.கணேசன், எஸ்.வி. சவுண்ட் சர்வீஸ் ஆர்த்தி ஸ்டுடியோ, 34பி, புதுமனை 4ம் தெரு, தென்காசி | 2,100 |
| 4 | திரு.எஸ்.சஙகர், சஙகர் சவுண்ட்ஸ் & டெக்கரேசன், 210, சுவாமி சன்னதி , தென்காசி | 3,200 |

1 மேற்படி செலவு தொகைக்கு நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன்னனுமதி பெறப்பட்டுள்ளது.

2 வரப்பெற்ற நான்கு விலைப்புள்ளிகளில் நாள் 1க்கு ரூ.2,100/- என குறைவான விலைப்புள்ளியினை திரு.எம்.கணேசன் என்பவரின் விலைப்புள்ளியினை அஙகீகரிக்கலாம்.

அ.கு 1 அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று விலைப்புள்ளியின் மீது முடிவு செய்ததற்கும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம். (2089/09/அ1)

<u>மன்றப்பொருள்: 19</u>

இந்நகராட்சிக்கு 2009-10ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, தண்ணீர் கட்டணம், குறைந்த செலவிலான கழிப்பிட கடன் தவணைத் தொகை மற்றும் குடியிருப்பு மேம்பாட்டு திட்டக் கடன் தவணைத் தொகை ஆகியவைகளை செலுத்துமாறு பொதுமக்களுக்கு தெரியும் வகையில் ஆட்டோ மூலம் நகராட்சி பகுதிகளில் பிப்ரவரி 2010 மற்றும் மார்ச் 2010 முடிய விளம்பர அறிவிப்பு செய்யவும் மற்றும் உள்ளூர் கேபிள் தொலைக்காட்சியில் அறிவிப்பு செய்யவும் உத்தேச செலவினம் ரூ.40,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 நகராட்சி நிதி ஆதாரத்தை பெருக்கும் பொருட்டு, அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று அறிவிப்பு செய்வதையும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/- மன்றம் ஒப்புதல் வழஙகலாம். (2089/09/அ1)

**மன்றப்பொருள்:20**

இந்நகராட்சி கூட்ட அரஙகில் உள்ள இருக்கைகள் பழுது அடைந்து விட்டதால், புதிதாக 40 ரிவால்விங குஷன் சேர்கள் வாஙகவும் 2 விஐபி சேர்கள் வாஙகவும் அதற்கு ஆகும் செலவுத் தொகை ரூ2.10 லட்சத்திற்கு மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு 1 மேற்படி சேர்கள் வாஙக மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி சேர்கள் வாஙகும் செலவுத் தொகையை SJSRY A&O நிதி மற்றும் பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:21**

தென்காசி நகராட்சி எல்கைக்குட்பட்ட 33 வார்டுகளில் சுமார் 275 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அடிபம்புகள் மூலம் குடிநீர் அல்லாத பிற உபயோகஙகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்படி ஆழ்குழாய் கிணறுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கம் செய்ய நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்தக்காலம் 31.03.2010ல் முடிவடைவதால் மேலும் 01.04.2010 முதல் 31.03.2011 வரையிலான காலத்திற்கு தனியார் மூலம் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.35 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினைநகராட்சி குடிநீர்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1109/10/இ1)

**மன்றப்பொருள்:22**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.24 ஐந்து வர்ணம் பெரிய தெரு கதவு எண்.28 அருகிலுள்ள மின்கம்பத்தின் சோடியம் ஆவி விளக்கினை அதன் அருகே காலியாக உள்ள மின்கம்பத்தில் மாற்றி தர தென்காசி தமிழ்நாடு மின்சார வாரியம் , இளநிலை பொறியாளர்(நகர்புறம் II) அவர்களின் கடித எண்.இமிபொ/விநியோகம்/நகர்I/தென்/கட்டு எண்83/09 நாள்.18.03.2010ம் தேதிய கடிதத்தில் ரூ.250/- செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (880/10/இ1)

**மன்றப்பொருள்: 23**

தென்காசி நகராட்சி பொதுநிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 47. நாள்.25.02.2010 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 24.03.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட உடையார் தெரு ரயில்வேகேட் அருகில் இருந்து மஙகம்மாள் சாலை வரை தார் சாலை அமைத்தல் | 9.25 | 1) எஸ்.சுடலைமுத்து<br>2) எஸ்.பாலசுப்பிரமணியன் | 0.46% கூடுதல்<br>0.10% குறைவு |

அ.கு: மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.10 % குறைவாக கொடுத்துள்ள திரு. எஸ்.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 24**

தென்காசி நகராட்சி குடிநீர் நிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 83. நாள்.25.02.2010 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 19.03.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஊர்காடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தென்காசி வரை உள்ள நீரூந்துநிலையஙகளிலுள்ள மின் மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் குடிநீர் குழாய் ஏற்படும் கசிவுகளை சரிசெய்ய | 9.50 | 1) ஆர்.சந்திரசேகரன் அம்பை<br>2) எஸ்.பாலசுப்பிரமணியன் தென்காசி | 0.40%குறைவு<br>1.85% கூடுதல் |

அ.கு: மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.40 % குறைவாக கொடுத்துள்ள திரு. ஆர்.சந்திரசேகரன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 25</u>**

தென்காசி நகராட்சி குடிநீர் நிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் .24 நாள்.13.01.2010 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 26.03.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மாதாபுரம் நீரூந்து நிலையத்திற்கு 75KVA திறன் கொண்ட புதிய ஜெனரேட்டர் வாஙகுதல் | 9.00 | 1) டுவல் அசோசியேட்ஸ் சென்னை<br><br>2) குமரன் இண்டஸ்ரீஸ் சென்னை | 0.06%குறைவு<br><br>1.11% கூடுதல் |

அ.கு: மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.06 % குறைவாக கொடுத்துள்ள சென்னை ,டுவல் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 26</u>**

தென்காசி நகராட்சி குடிநீர் நிதி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் .25 நாள்.13.01.2010 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 26.03.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நீரூந்து நிலையத்திற்கு 75KVA திறன் கொண்ட புதிய ஜெனரேட்டர் வாஙகுதல் | 9.00 | 1) டுவல் அசோசியேட்ஸ் சென்னை<br><br>2) குமரன் இண்டஸ்ரீஸ் சென்னை | 0.06%குறைவு<br><br>1.11% கூடுதல் |

அ.கு: மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.06 % குறைவாக கொடுத்துள்ள சென்னை ,டுவல் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 27**

தென்காசி நகராட்சி 12வது நிதிக்குழு பரிந்துரைப்பணி 2009-10ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 212 நாள் 29.10.2009 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 26.03.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | போகநல்லூர் புதிய உரக்கிடஙகில் விண்ட்ரோஸ் பிளாட்பார்ம் அமைத்தல் மற்றும் தென்காசி பழைய உரகிடஙல் சிறிய பிளாட்பார்ம் அமைத்தல் | 9.50 | 1) எஸ்.சுடலைமுத்து கீழப்புலியூர்<br>2) எம்.கிருஷ்ணசாமி கிளாஙகாடு | 0.12%கூடுதல்<br>0.8% குறைவு |

அ.கு: மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையைவிட 0.8 % குறைவாக கொடுத்துள்ள திரு எம்.கிருஷ்ணசாமி ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 28**

தென்காசி நகராட்சி 12வது நிதிக்குழு பரிந்துரைப்பணி 2009.2010 ஆண்டு இந்நகராட்சி திடகழிவு மேலான்மை திட்டத்திதின கீழ் பொது சுகாதார பிரிவிற்கு 33 புதிய தள்ளுவண்டிகள் வாஙக இந்நகர்மன்ற தீர்மான எண் 212 நாள்29.10.2009 ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி 26.03.10 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ ( ஒன்றுக்கு ) |
|---|---|---|
| 1 | சன் எண்டர்பிரைசஸ் 139,லிட்டில் மவுண்ட் சென்னை | 19,100 |
| 2 | ஜெனரல் டிரேடர்ஸ் 61/1,கணபதி தெரு சென்னை | 20,150 |

அ.கு: மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண் 1 ல் கண்ட சென்னை சன் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 29</u>**

தென்காசி நகராட்சி **12**வது நிதிக்குழு பரிந்துரைப்பணி 2009-2010 இந்நகராட்சி கணினி பிரிவிற்கு சர்வர் மற்றும் யு.பி.எஸ் வாஙக இந்நகர்மன்ற தீர்மான எண் **212** நாள் **29.10.2009** ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி **26.03.10** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ |
|---|---|---|
| **1** | கோல்டன்இன்போடெக் தென்காசி | **3,51,750** |
| **2** | மீம் இன்போடெக் தென்காசி | **3,54,500** |

அ.கு: மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண் **1** ல் கண்ட தென்காசி கோல்டன் இன்போடெக் நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்:30</u>**

இந்நகராட்சியில் நடைபெரும் திட்டபணிகள் **(2008-2009 ,2009–2010)** குறித்தவிவரத்தினை தினத்தந்தி வழிகாட்டி மலரில் விளம்பரம் செய்த வகைக்கு ரூபாய்**18,400/-** க்கான **(**பட்டியல் எண் TVL 0190800 நாள் **11.02.2010)** பட்டியல் வரப்பட்டுள்ளது மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்
**2** மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:31</u>**

இந்நகராட்சி மூலம் தமிழ் நாடு புதிய சட்டபேரவை கட்டிட திறப்புவிழானை முன்னிட்டு தினமணி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.**19968/–**க்கான **(** SAE /73186 நாள் **13.03.2010 )** பட்டியல் வரப்பட்டுள்ளது மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்
**2** மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:32**

இந்நகராட்சி பொதுநிதி பணி 2009 - 2010 ஆண்டு மதுரை சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிநடைபெறும் இடத்தில் குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமணி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.4,719/-க்காண (I.A.F14915 நாள்.04.03.2010) பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழுங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:33**

இந்நகராட்சி மூலம் தமிழ் நாடு புதிய சட்டபேரவை கட்டிட திறப்புவிழானை முன்னிட்டு தினகரன் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ.16500/—க்கான ( 478860 நாள் 13.03.2010) பட்டியல் வரப்பட்டுள்ளது மேற்படி தொகையினை வழுங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:34**

இந்நகராட்சி பொதுநிதி பணி 2009- 2010 ஆண்டு மதுரை சாலையில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிநடைபெறும் இடத்தில் குடிநீர் குழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மதுரை தினமணி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ 2880/- க்காண ( 2124 நாள் 04.03.2010) பட்டியல் வரப்பட்டுள்ளது மேற்படி தொகையினை வழுங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:35</u>**

இந்நகராட்சி 12 விதிக்குழு பரிந்துரை பணி 2009 . 2010 ஆண்டு மற்றும் குடிநீர் நிதி 2009 . 2010 ஆண்டு பணிகள் மேற்கொள்ள ஒப்ந்தபுள்ளி அறிவிப்பினை மதுரை மணி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு ரூ 5888 / க்காண ( 2085 நாள் 09.02.2010 )பட்டியல் வரப்பட்டுள்ளது மேற்படி தொகையினை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:36</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு எண் 27 ல் குலசேகரநாதர்கோவில் தெருவில் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் மேற்படி தெருவில் பொது மக்கள் செல்ல சிறமமாக உள்ளது மேலும் அதன் வழியாக செல்லகூடிய கழிவுநீர்கள் ரோட்டின் மேல் செல்வதால் சுகாதாரகேடுகள் ஏற்படுகிறது எனவே பொது மக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு 1.90 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:37</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு எண் 24 ல் கோடைகாலத்தில் குடிநீர் பற்றாகுறையை தவிற்கும் பொருட்டு அப்பகுதியில் இரண்டு ஆழ்துளை கிணறுடன் கூடிய பிளாஸ்டிக் டேஙக அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ 3 .00 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 38</u>**

தென்காசி நகராட்சி குடிநீர் நிதி **2009-10**ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் **48.** நாள்.**25.02.2010** ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி **24.03.10** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ லட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட மதுரை சாலையில் ரயில்வே மேம்பாலம் பணி நடைபெறும் இடத்தில் குடிநீர் குழாய் அமைத்தல் | 36.00 | 1) எஸ்.சுடலைமுத்து<br>2) எஸ்.பாலசுப்பிரமணியன் | 17.18%அதிககூடுதல்<br>10.53% கூடுதல் |

அ.கு 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட **4.95** சதவீதம் கூடுதலாக செய்ய சம்மதக் கடிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

2 மேற்படி பணிக்கு ரூ.**36.00** இலட்சம் நெடுஞ்சாலைத்துறை மூலம் பெறப்பட்டுள்ளது.

3 மேற்படி பணிக்கு நெடுஞ்சாலைத்துறை மூலம் பெறப்பட்ட தொகையை விட கூடுதலாகும் செலவுத் தொகையினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:39</u>**

இந்நகராட்சியில் சுவர்ண ஜெயந்தி ரோஜ்கார் யோஜனா திட்டம் **2009-10**ம் நிதியாண்டின் கீழ் உள்கட்டமைப்பு வசதி செய்யும் பணிக்கு ரூ.**2,05,132** நிதி ஒதுக்கீடு செய்து சென்னை, நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.**33665/09**/யுபிஏ நாள்.**05.10.09**ல் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் நகர்பிரிவு எண். **2** ரயில்வே மேட்டு தெருவில் சிமெண்ட் காஙகிரீட் தளம் அமைக்க சமுதாய மேம்பாட்டு சஙக தீர்மானம் எண்.**1** நாள்.**30.12.2009** மற்றும் வறுமை ஒழிப்பு குழு தீர்மானம் எண். **1** நாள். **13.01.2010**ல் தீர்மானம் நிறைவேறியுள்ளது. அதன்பேரில் மேற்படி சாலையினை சிமெண்ட் தளமாக அமைக்கும் பணிக்கு மன்ற அனுமதிக்கு.

அ.கு 1 மன்றம் அனுமதி வழஙகலாம்.

**<u>மன்றப்பொருள்:40</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு எண் 7 மலையான் தெருவில் சிமின்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்கவும் நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கையின் படியும் இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுருத்தலின் படியும் மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ 4.00 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:41</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு எண் 13 மரைக்காயர்பள்ளிவாசல் தெருவில் கோடைகாலத்தில் குடிநீர் பற்றாகுறையை தவிற்கும் பொருட்டு அப்பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பிளாஸ்டிக் டேங அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ 1 .50 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:42</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு 9 மவுண்ட் ரோடு ஆட்டோ ஸ்டாண்டில் இருந்து பாறையடி தெரு வரை உள்ள தார் தளம் மிகவும் மோசமான நிலைல் உள்ளதால் மேற்படி சாலையில் பொது மக்கள் மற்றும் வாகனம் செல்ல சிறமமாக உள்ளது எனவே பொது மக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ 4.00 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டபடுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:43**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட மதுரை சாலையில் மேம்பாலம் பணிநடைபெறுவதால் ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனங்கள் கூளகடைபஜார் மாற்று பாதை வழியாகசெல்லவேண்டியிருப்பதால் அவ்வழியில்இருக்கும் (எல்.ஆர்.எஸ்.பாளையம் தெருவில் உள்ள) பயனற்ற குடிநீர்தொட்டி இடையூறாக உள்ளது மேற்படி குடிநீர் தொட்டியினைஇடித்து அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த ஆகும் உத்தேச செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:44**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு 6 எல்.ஆர்.எஸ்.பாளையம் தெருவில் சாவடி அருகில் உள்ள கிணறு பயனற்ற நிலையில் உள்ளது இதனால் அஙகுள்ள குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு உயிர்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது மேலும் அப்பகுதிமக்கள் மேற்படி கிணற்றில் வீட்டின் கழிவுகள் மற்றும் குப்பைகள் போடுவதால் சுகாதாரகேடு ஏற்பட்டு நோய்பரவவும் வாய்ப்புள்ளது எனவே அதனை தவிர்க்கும் பொருட்டு அக் கிணற்றை மூடமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி கிணற்றினை மூட ஆகும் செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்:45**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு எண் 11 ல் சிமின்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால்கள் அமைக்க இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுருத்தலின் படி மேற்படி பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ 2.00 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:46</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு 20 சிந்தாமனி சுடுகாடு அருகில் உள்ள கிணறு பயனற்ற நிலையில் உள்ளது இதனால் அங்குள்ள குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கு உயிர்சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது மேலும் அப்பகுதிமக்கள் மேற்படி கிணற்றில் வீட்டின் கழிவுகள் மற்றும் குப்பைகள் போடுவதால் சுகாதாரகேடு ஏற்பட்டு நோய்பரவவும் வாய்ப்புள்ளது எனவே அதனை தவிர்க்கும் பொருட்டு அக் கிணற்றை மூடமன்ற அனுமதி வேண்டபடுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி கிணற்றினை மூட ஆகும் செலவு தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:47</u>**

இந் நகராட்சி பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் தேவைக்காக ஊர்காடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து பம்பிஙசெய்யப்பட்டு நீரூந்து நிலையஙகள் மூலம் தென்காசி நகருக்கு குடிநீர் சப்ளை செய்ப்ப்பட்டு வருகிறது இந்நிலையில் திருமலையப்பபுரம் மற்றும் ஊர்காடு நீரேற்று நிலையக்ளில் உள்ள பம்புகள் பழுதடைந்துள்ளன மேற்பழுதினை சரிசெய்யவும் , பிறதான குழாயில் உள்ள எல்லைபுள்ளி ஸ்கவர் அருகில் இரும்பு குழாய் அமைக்கவும் உத்தேச செலவு தொகை ரூ.35,000 க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்:48</u>**

இந் நகராட்சி எல்கைக்கு உட்பட்ட வார்டு எண் 23 ல் கோடைகாலத்தில் குடிநீர் பற்றாகுறையை தவிர்க்கும் பொருட்டு அப்பகுதியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய பிளாஸ்டிக் டேஙக் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ 1 50 லட்சத்திக்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>மன்றப்பொருள்:49</u>

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.7ல் ஆழ்குழாய் கிணறுடன் கூடிய பிளாஸ்டிக் டேங்க அமைக்க இந்நகர் மன்ற தீர்மான எண்.277, நாள்.31.12.2007ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்ள இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் எஸ்.முத்துசுப்பிரமணியன் என்பவருக்கு 03.12.07 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி இதுவரை முடிக்கப்படவில்லை. மேற்படி ஒப்பந்தக்காரருக்கு பலமுறை நேரில் கூறப்பட்டது. மேலும் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி பணி மேற்கொள்ள முடியாதமைக்கு ஒப்பந்தக்காரர் கடிதத்தில் மேற்படி தெருவானது துளைபோடும் கம்பரஸர் லாரி செல்ல முடியாத குறுகிய பாதையாக உள்ளது. மேலும் 4 1/2" போர் போடுவதற்கு மெயின் ரோட்டில் இருந்து சுமார் 500 அடி நீளத்திற்கு மேலாக உள்ளதாலும் போர் போடுவதற்கு நிலத்தடி நீர் ஆய்வாளர் பார்வையிட்டதில் நீர் ஆதாரம் இல்லை என்று கூறிவிட்டதாலும் மேலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் புதியதாக அமைக்கப்படும் ஆழ்குழாய் கிணற்றில் நீர் ஆதாரம் இருந்தால் மட்டுமே ஒப்பந்தக்காரருக்கு செலவு தொகை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி பணியினை என்னால் செய்ய முடியவில்லை என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி பணியினை ரத்து செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அ.கு 1 திரு.எஸ்.முத்துசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம் (3919/07/இ1)

<u>மன்றப்பொருள்:50</u>

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.31, புதுமனை 1ம் தெரு கீழப்பகுதியிலுள்ள ரோட்டில் கழிவுநீர் ஓடை இல்லாததால் அப்பகுதியிலுள்ள வீடுகளிலுள்ள கழிவுநீர் சாலை வழியே செல்வதினால் சுகாதார கேடு ஏற்படுவதுடன், நோய் பரவும் அபாய நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்படி இடத்தில் சிறுபாலம் (ம) மழைநீர் வடிகால் அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.85,000/-க்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (1107/10/இ1)

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.

<u>தென்காசி நகராட்சி</u>

<u>31.03.2010 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்</u>

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 91 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 92 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 93 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 94 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 95 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 96 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 7 | 97 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 8 | 98 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 9 | 99 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 10 | 100 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 11 | 101 | அனுமதிக்கப்பட்டது |
| 12 | 12 | 102 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 13 | 103 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 14 | 104 | அனுமதிக்கப்பட்டது |
| 15 | 15 | 105 | அனுமதிக்கப்பட்டது |
| 16 | 16 | 106 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 17 | 107 | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 18 | 108 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 19 | 109 | அனுமதிக்கப்பட்டது |
| 20 | 20 | 110 | அனுமதிக்கப்பட்டது |
| 21 | 21 | 111 | அனுமதிக்கப்பட்டது |
| 22 | 22 | 112 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 23 | 113 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 24 | 114 | அனுமதிக்கப்பட்டது |
| 25 | 25 | 115 | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 26 | 116 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 27 | 27 | 117 | அனுமதிக்கப்பட்டது |
| **28** | **28** | 118 | அனுமதிக்கப்பட்டது |
| 29 | 29 | 119 | அனுமதிக்கப்பட்டது |
| **30** | **30** | 120 | அனுமதிக்கப்பட்டது |
| 31 | 31 | 121 | அனுமதிக்கப்பட்டது |
| **32** | **32** | 122 | அனுமதிக்கப்பட்டது |
| 33 | 33 | 123 | அனுமதிக்கப்பட்டது |
| **34** | **34** | 124 | அனுமதிக்கப்பட்டது |
| 35 | 35 | 125 | அனுமதிக்கப்பட்டது |
| **36** | **36** | 126 | அனுமதிக்கப்பட்டது |
| 37 | 37 | 127 | அனுமதிக்கப்பட்டது |
| **38** | **38** | 128 | அனுமதிக்கப்பட்டது |
| 39 | 39 | 129 | அனுமதிக்கப்பட்டது |
| **40** | **40** | 130 | அனுமதிக்கப்பட்டது |
| 41 | 41 | 131 | அனுமதிக்கப்பட்டது |
| **42** | **42** | 132 | அனுமதிக்கப்பட்டது |
| 43 | 43 | 133 | அனுமதிக்கப்பட்டது |
| **44** | **44** | 134 | அனுமதிக்கப்பட்டது |
| 45 | 45 | 135 | அனுமதிக்கப்பட்டது |
| **46** | **46** | 136 | அனுமதிக்கப்பட்டது |
| 47 | 47 | 137 | அனுமதிக்கப்பட்டது |
| **48** | **48** | 138 | அனுமதிக்கப்பட்டது |
| 49 | 49 | 139 | அனுமதிக்கப்பட்டது |
| **50** | **50** | 140 | அனுமதிக்கப்பட்டது |

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.